2014 டிசம்பர் 4]

தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 128 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் தரம் உயர்த்துவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படும் நிலையில் இருக்கின்றன. திண்டுக்கல் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். திண்டுக்கல் மாவட்டத்திலே மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலேயும் இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்ற செய்தியையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

3. அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்து அவையில் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இன்றைக்கு சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. நேற்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் இவையெல்லாம் பேசியாகிவிட்டது.*

பேசி முடிவெடுத்ததற்குப் பின்னாலே இந்த மாதிரி சபையிலே வந்து விவாதம் செய்வது சரியல்ல. (குறுக்கீடுகள்)

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அச்சிட்ட அட்டையை உயர்த்திக் காண்பித்தனர்.)

இந்த மாதிரி போஸ்டர் எல்லாம் அவைக்குள்ளே கொண்டு வந்து காட்டக்கூடாது. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. போஸ்டர்களை உள்ளே வையுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவெடுத்த விஷயங்களைப்பற்றித் திரும்பவும் வற்புறுத்துவது என்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையில்லாத செயல். ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே முடிவு செய்து, எடுத்த முடிவினை மாற்றும்படி நீங்கள் வற்புறுத்துவது நியாயமில்லை. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த மாதிரி போஸ்டர்களையெல்லாம் என்னுடைய அனுமதி இல்லாமல் உள்ளே கொண்டு வந்து காட்டக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை. மூத்த உறுப்பினர்கள் நீங்கள். கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் இந்த மாதிரி செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் இந்த மாதிரி செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் இப்பொழுது சிறப்புக் கவன ஈர்ப்பு பிரச்சினையை எடுத்துக்கொண்டிருக்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பரிசீலனை செய்துதான், மூன்று பிரச்சினைகளை சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்றைக்கு எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மூன்று சிறப்புக் கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறேன். இதற்கு மேலும் என்ன பரிசீலனை செய்ய முடியும்? உங்களுடைய பிரச்சினைகள்தான். (குறுக்கீடுகள்) நான் இதற்கு மேலும் என்ன பரிசீலனை செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) இல்லை. மக்களுடைய பிரச்சினைகள்தான். இன்றைக்கு மூன்று முக்கியமான பிரச்சினைகளை, அவசரப் பொது முக்கியத்துவம் கருதி, நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதித்திருக்கிறேன். இதற்கு மேலேயும் நீங்கள்— (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையில்லை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், இதுவெல்லாம் முறையல்ல. போஸ்டர்களை உள்ளே வையுங்கள். இதுவெல்லாம் சரியல்ல. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சபை நடவடிக்கைகள் குறித்து நன்கு அறிந்து பக்குவப்பட்டவர்கள். சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குகின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டும். சட்டப் பேரவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்பதற்குக்கூட அவர்கள் தயாராக இல்லாமல், அனுமதியில்லாமல் மூத்த உறுப்பினர்களெல்லாம் ஆளாளுக்கு இப்படி நடந்துகொள்வது சரிதானா என்பதை அவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் சொல்வதை முதலில் உள்வாங்கிக்கொண்டு, அடுத்து அவர்கள் கட்சியின் சார்பில் அவர்கள் தலைவர் யாராவது பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவு சம்பந்தமாகப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை. அலுவல் ஆய்வுக் குழு முடிவு சம்பந்தமாகப் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது ஏற்கெனவே முடிவு செய்தாகிவிட்டது. திரும்பத் திரும்ப இப்படி செய்தால், நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். எல்லோரும் எழுந்து நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள் சொல்கிறேன், திரு. துரைமுருகன். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுருகன் அவர்களைப் பேச அழைத்துவிட்டேன், பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். திரு. அ. சவுந்தரராசன், முதலில் நீங்கள் கையில் வைத்திருக்கும் பேப்பரை உள்ளே வையுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள். திரு. அழகாபுரம் மோகன்ராஜ், நீங்கள் உட்காருங்கள், பின்னர் பேச வாய்ப்புத் தருகிறேன்.

முற்பகல் 11-35

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய ஆணைக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். எதிர்க்கட்சி

வரிசையில் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கை என்னவென்றால், நேற்றைய தினம் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் நேற்றே முடிவு எடுக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) இல்லை. நேற்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் விரிவாக விவாதித்து முடிவெடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை மாற்ற நீங்கள் வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைப் பற்றி பேசுவதால், அலுவல் ஆய்வுக் குழுவிற்கே மரியாதை இல்லாத நிலை உருவாகிவிடும். (குறுக்கீடுகள்) அது முறையல்ல. பின்னர், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எதற்காக நீங்கள் கலந்துகொண்டு பேசினீர்கள்? (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு, அப்போது எடுக்கப்பட்ட முடிவைப் பற்றி மீண்டும் அவையில் பேசுவது என்ன முறை? (குறுக்கீடுகள்) அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் அலுவல் ஆய்வுக் குழுவில் இருக்கிறீர்கள். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் ** விவரமாகப் பேசப்பட்டது. அனைவரும் இதுகுறித்து பேசித்தான் முடிவெடுத்திருக்கிறோம். மீண்டும் அவையில் அதுகுறித்து பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நேற்று அனைத்துக் கட்சிகளின் மாண்புமிகு உறுப்பினர்களும் கலந்து கொண்ட அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) அங்கு பேசி முடிவெடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்பு கொடுத்தார்கள். ஆனால், எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவையின் விதிகளுக்குப் புறம்பாக அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை இங்கே அவையில் விமர்சிக்கக் கூடாது. அதற்கு சட்டமன்றப் பேரவை விதிகள் இடம் தராது என்பதை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2014 டிசம்பர் 4] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அனைவரும் அறிந்திருப்பீர்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவைப்பற்றி விவாதிக்காமல், மக்கள் பிரச்சினைகள் மற்றது ஏதாவது இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் குறிப்பிடும் பிரச்சினை குறித்து இன்று எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இன்று மூன்று முக்கியமான விஷயங்களை அவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் என்னவென்று சொல்லுங்கள், மற்றவர்கள் உட்காருங்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *நேற்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது குறித்து அவையில் பேசாதீர்கள் என்று சொல்கிறீர்கள். இப்போது அவையில் நடப்பது எல்லாம் முறைப்படிதான் நடக்கிறதா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்று உங்கள் உறுப்பினர் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைப் பற்றி பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை இங்கே பேரவையில் விமர்சனம் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) அவையில் அதைப்பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசி முடிவெடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்)*

தருமபுரியில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று மூன்று முக்கியமான விஷயங்களை எடுத்துக்கொண்டு அவையில் விவாதிக்க இருக்கின்றோம். (குறுக்கீடுகள்) இல்லை, இன்று மூன்று முக்கிய பிரச்சினைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இருக்கிறேன். மக்களுடைய பிரச்சினையைப் பேரவையில் பேச இருக்கிறோம். ஆனால், நீங்கள் மக்கள் பிரச்சினையைப் பேரவையில் பேசவிடாமல் தடுக்கிறீர்களே, என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், அது முறையல்ல. (குறுக்கீடுகள்) மற்ற பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கு நான்

அனுமதி அளிக்கிறேன். ஆனால், அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவைப்பற்றி பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எம். ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு நீங்கள் வரவில்லை, என்னவென்று சொல்லுங்கள். அலுவல் ஆய்வுக் குழு பற்றி பேசக்கூடாது.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது சம்பந்தமாக தஞ்சாவூர், திருவாரூர் போன்ற மாவட்டங்களில் உள்ள 500 மையங்களில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், இன்றைக்கு அவையில் ஒரு பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறோம். நாளைக்கு ஒரு பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இருக்கிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நீங்கள் குறிப்பிடும் பிரச்சினையை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. ஆறுமுகம், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் அவையை நடத்த விடாமல் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. அழகாபுரம் மோகன்ராஜ், நீங்கள் என்னை அவையை நடத்தவிடாமல் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி நான் இன்று அவையில் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களுடைய ஜீவாதார உரிமைகளை தனித்து நின்று. . . (குறுக்கீடு)*